IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, VADIPATTI.

| | | | |
|---|---|---|---|
| DEPOSITION OF WITNESS | | C.C.No | 1/2018 |
| | | PW's | 5 |
| NAME | Ganapandithan | CASTE | |
| S/O / W/O | Gumanan | RELIGION | |
| VILLAGE | | CALLING | |
| TALUK | | AGE | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 05th day of August 2019

முதல் விசாரணை: 05-08-2019

நான் சிவகங்கை மாவட்டம் கொத்தங்குளத்தில் வசித்து வருகிறேன். நான் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். அசா.1 ராஜாத்தி, அவரது தகப்பனார் முத்து ஆகியவர்களை தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு திருப்பாச்சேத்தியில் உள்ள காமாட்சி அம்மன் கோவிலில் அசா.1க்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திறகு 13 பவுன் நகையும் ரொக்கமாக ரூ.50 ஆயிரம் மற்றும் பண்ட பாத்திரங்கள் வழங்கியதாக முத்து என்னிடம் தெரிவித்தார். திருமணம் முடிந்து 3 மாதத்தில் கூடுதலாக நகைகள் கேட்டும் 1வது எதிரிக்கு வாகனம் கேட்டும் துன்புறுத்தி அவரை கையில் சூடு வைத்து விட்டதாக முத்து என்னிடம் சொன்னார். அதன் பேரில் நான், முத்து, மாசானம் ஆகியவர்கள் சோழவந்தானிற்கு சென்று எதிரிகள் வீட்டில் விசாரித்த போது அவர்கள் சமையல் செய்யும் போது எண்ணெய் தெரித்து விட்டதாக சொன்னார்கள். எதிரிகள் வீட்டில் அசா.1 இருந்ததால் அவரால் உண்மையை சொல்ல முடியாத சூழ்நிலையில் இருந்தார். நாங்கள் பிள்ளையை வாழ வைக்க சூழ்நிலையில் இருந்ததால் நாங்கள் அவரை அங்கு விட்டு விட்டு வருவதாக இருந்தோம். ஆனால் அவர்கள் அசா.1 ஐ கூட்டி செல்லுங்கள் என்று அனுப்பி வைத்து விட்டார்கள். பிறகு தனிக்குடித்தனத்திற்கு வீடு பார்த்து பிறகு அழைத்து கொள்வதாக சொன்னார்கள். அதன் பின்னர் மானாமதுரை அனைத்து மகளிர் கா.நி அசா.1 புகார் கொடுத்தார். அங்கு சென்று பேசிய போது அசா.1 ஐ மீண்டும் அழைத்து கொள்வதாக எதிரிகள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு அழைத்து செல்லவில்லை அதனால் அசா.1 நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தார். இது சம்பந்தமாக சமயநல்லூர் அனைத்து மகளிர் கா.நி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:

நான் முதல் விசாரணையில் சொல்லிய விபரங்கள நகை போட்ட விபரம் பணம் கூடுதலாக கேட்டது முத்து சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சோழவந்தானிற்கு பஞ்சாயத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். நான் பஞ்சாயத்திற்கு வந்த அப்போது அவர்கள் நகை, பணம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். அசா.1 க்கு கையில் சூடு வைத்தது போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுத்தது அவர்கள் அழைத்து செல்லவில்லை நீதிமன்றதில் கொடுத்துள்ளோம் என்று முத்து சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மானாமதுரை போலிசாரும் பிறகு சமயநல்லூர் கா.நி நாங்கள் வந்தோம் அப்போது அங்கும் விசாரித்தார்கள். சொன்ன மாதிரி எதுவும் நடக்கவில்லை

முத்து எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, VADIPATTI.

| DEPOSITION OF WITNESS | | C.C.No | 1/2018 |
|---|---|---|---|
| | | PW's | 6 |
| NAME | Pandi Durai | CASTE | |
| S/O / W/O | Raman | RELIGION | |
| VILLAGE | | CALLING | |
| TALUK | | AGE | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 05th day of August 2019

முதல் விசாரணை: 05-08-2019

நான் கொத்தங்குளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். அசா.1, மற்றும் அவரது அப்பா முத்து ஆகியவர்களை தெரியும். எதிரியையும் தெரியும். திருப்பாச்சேத்தி காமாட்சி அம்மன் கோவிலில் சுமார் 7 வருடத்திற்கு முன்பு அசா.1க்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு 13 பவுன் நகைகள், ரூ.50 ஆயிரம் ரொக்கம் மற்றும் சீர்வரிசை பாத்திரங்கள் கொடுத்தார்கள். அசா.1 ஐ 1வது எதிரி கைகளிலும் தோள்பட்டையிலும் சூடு வைத்து விட்டார். மீண்டும் ரூ.1 லட்சம் உன் அப்பாவிடம் சென்று வாங்கி வா என்று சொல்லி 1வது எதிரி அசா.1 ன் கையில் சூடு வைத்து விட்டார். ஞானபட்டிதன், முத்து, முத்து இருளன் மற்றும் நான் ஆகியவர்கள் மானாமதுரை அனைத்து மகளிர் கா.நி வைத்து பேச்சு வார்த்தை நடத்தினோம். இருவரும் சேர்ந்து வாழ்வதற்காக பேசினோம். ஆனால் இருவரும் சேர்ந்து வாழும் எண்ணத்தில் இல்லை அசா.1 பயந்து சூடு வைப்பதால் என்னை கொன்று விடுவார்கள் என்று தெரிவித்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:

முத்துவும் நானும் ஒரே ஊர்காரர்கள் தான். சூடு வைத்த போது நான் நேரடியாக பார்க்கவில்லை. நகை கேட்டது பணம் கேட்டது எல்லாம் முத்து சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அப்பாவிடம் சென்று ரூ.1 லட்சம் வாங்கி வா என்று சொல்லியது எனக்கு தெரியாது அவர் சொல்லி தான் தெரியும். சொன்ன மாதிரி எதுவுமே தெரியாது முத்து சொல்லி கொடுத்ததை தான் நான் இங்கு வந்து சொல்கிறேன் போலிசார் என்னை எப்போதும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.